# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889)
ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey.
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-கூச] யாழ்ப்பாணம்:- நந்தன வரு மாசிமீ உ௦உ செவ்வாய்க்கிழமை (3 March. 1953) [இல - அஅ]

## திருவாகி நின்ற திறமே போற்றி...!

திருச்சிற்றம்பலம்.

மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
மருவி யென்சிந்தை புகுந்தாய் போற்றி
யுருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
யுள்ளாவி வாங்கி யொழித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடு முகிலே போற்றி
கயிலைமலையானே போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்.

## 'அந்தணர் என்போர் அறவோர்'

### இன்று செந்தண்மைபூண் டொழுகுகின்றாரா?

அந்தணர் குலம் ஆதியில் அறிவுச் சுடராய்த் திகழ்ந்தது என்று கூறின் அது மிகையாகாது. அந்தணரின் ஆதிகாலக் கல்வி முறைகளும், ஒழுக்கமும் வேதபாராயண வகைகளும் பொன் போற் போற்றத்தக்கன. ஆனால் தற்காலம் இவைகள் அருகி வருகின்றன. இங்ஙனம் அருகி வருங் காலத்தில் அந்தணரின் ஆதிகாலப் பண்பைச் சிறிது உற்று நோக்குதல் சாலவும் பொருத்தமாகும்.

நாம் பண்டைக்காலப் பனுவல்கள் எதை எடுத்துப் பார்த்தாலும் அங்கே அந்தணரின் மேன்மைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. சமய குரவருள் ஒருவராகிய மணிவாசகப்பெருமான் ஆமாத்திய குலத்தில் அவதரித்த அந்தணரே: அவர் பாண்டியனின் முதல் அமைச்சராகவிருந்து அரசாங்க கடமைகளை முதன்மைபெற நடத்தினர். அத்துடன் தம் வருணத்திற்குரிய ஆசார ஒழுக்கங்களிலும் முதன்மை பெற்று விளங்கினர். தெய்வ பக்தியிலும் சிறந்த சிவாநுபூதிச் செல்வராகத் திகழ்ந்து ஈற்றில் இறைவன் திருவடியில் இரண்டறக் கலந்தார். இது அந்தணரின் பண்டைக்காலப் பண்பை நன்கு விளக்குகின்றது.

இவைகளை அறியாத ஆங்கில மோகங்கொண்ட இக்கால அந்தணருட் சிலர் அரசாங்க உத்தியோகம் பார்ப்போர் ஆசார சீலராய் இருக்க முடியாதென்றும், இக்காலத்திலே கடுமையான வைதிக முறைகளைக் கையாள முடியாதென்றும கூறி ஆசார ஒழுக்கங்களை (இந்தியாவினின்றும, இங்கு வந்து தொழில் பார்க்கும் அந்தணருள்ளும் சிலர் நழுவி விடுகிறார்கள். என்னே காலத்தின் கோலம்! அந்தணரென்னும் பெயரைச் சூட்டிக்கொண்டு, மேன்மை பொருந்திய பூணூலையும் அணிந்துகொண்டு அந்தணர் குலத்திற்கே, அவமானஞ் செய்கின்றார்கள்:! இவர் சாதித் துரோகிகள் சமயத் துரோகிகள அல்லவா? மணிவாசகப் பெருமான் முதல் அமைச்சராக விருந்து அரசாங்க கடமைகளை பார்க்கவில்லையா? ஆசார சீலராய்த் திகழவில்லையா? ஆண்டவன் திருவடி நீழலை அடையவில்லையா? எத்தொழிலைப் பார்த்தாலும் எங்கேயிருந்தாலும தம் குல ஆசாரப்படி இருக்க வேண்டுமெனறு திடசித்தங் கொண்டவர்கள ஆசாரமுடையவர்களாய் இருக்கலாம். அஃதில்லாதவர்கள் பல சாட்டுக்களைக் கூறுவார்கள.

**ஸ்ரீ சி. கணேசலிங்கஐயர்**
தெல்லிப்பழை

ஆதியில் அந்தணர்களே அறத்தின் வித்தாக இருந்தார்கள். அன்பின் உறைவிடமாக விளங்கினார்கள. கல்விக் களஞ்சியமாக மிளிர்ந்தார்கள். செந்தண்மை பூண்டொழுகுஞ் சீலர்களாய்த் திகழ்ந்தார்கள. இதனையே திருவளளுவப் பெருந்தகை "அந்தணரென்போ ரறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகலால்" என்று மிக அழகாக எடுத்துக் கூறியுள்ளார். இன்னும் நாம் உற்று நோக்கும்பொழுது தில்லையில் மூவாயிரம் அந்தணர்கள இருந்தார்கள. அவர்கள தில்லை மூவாயிரவர் என்னும் பெயரோடு தில்லை நடராசப் பெருமானுக்குத் திருத்தொண்டு செய்தமையும் அவர்களது பெருமைகளைச் சிறப்பித்துத் தமது அருமைத் திருவாக்கினாலே சிவபெருமான "தில்லைவாழந்தணர்த மடியார்க்கு மடியேன்" என்று சுந்தரமூர்த்தி நாயனாருக்கு அடியெடுத்துக் கொடுத்தமையும், இந்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# இறை உணர்ச்சிகொண்டு

## அன்புவழிபாடு செய்தல்

### பேரருளுக்கு ஆளாவதற்குப் பெருவழி

உண்மையில்லாமல் எதுவும் தோன்றாது. கயிறு ஒன்று இருந்து சர்ப்பம்தோன்றுகிறது: பாழான பாலைவனத்தின் மேலுள்ள வாயுவில் கானல் நீர் தோன்றுகிறது. அதுபோல் "நான்" என்ற உண்மை யில்லாமல் பொய்யான அகந்தை தோன்றாது. இவ்வுண்மையான 'நானே' ஆன்மா ஆகும். இதைக் கண்டு பிடிக்க, 'நான்' என்னும் உணர்வே சாதனமாகும். இதற்கு உவமை:— ஒரு நாய் தன் எஜமானை விட்டுப் பிரிந்திருக்குமானல், அவனுடைய வாசனையைப் பின் பற்றித் தொடர்ந்து, அவனைச் சேருகிறது போல், உண்மையான ஆன்மாவின் கதிராய் மனதில் படும் 'நான்' என்னும் எண்ணத்தைப் பிடித்துக்கொண்டு, அதன் மூலமான ஆன்மாவைச் சேரலாம், என்று கீதையில் பகவான் விளக்குகிறார்.

உலகத்தில் மோட்ச ஆசையுள்ளவர்களால் எத்தனையோ சாதனங்கள் கையாளப்படுகின்றன; அவர்கள் பலவாறு அலைந்து அடையும் முடிவை அடைவதற்கு நேரான வழி, இந்த 'நான்' என்பதின் மூலத்தைக் காண உறுதி கொண்டிருப்பதே. ஆகையால் இது மகா யோகம் என்றும் கூறப்படுகிறது.

நான் என்பது சம்சாரிகளால் உடம்போடு பிணைக்கப்பட்டு, 'இவ்வுடம்பே நான்' என்று வருகிறது. உடம்பு சடமும் பொய்யும் ஆகும்; 'நான்' என்ற உணர்வை அதனின்றும் பிரித்தெடுத்து சுத்தமாக்கி, அதை உள்ளபடி காணத் தீர்மானிக்க வேண்டும்; இது "நான் யார்?" என்ற ஆராய்ச்சி, — உண்மையான நான் எப்படியிருக்கும்? என்று நேரில கண்டனுபவிக்க ஒரு மனப்படுதல; 'நான்' என்பது — சூரியனது கதிர்போல் — எங்கிருந்து உதிக்கும், என்று அதற்கு மூலமான ஞான சூரியனை ஆன்மாவைப் - பெறுவோம் என்று, மனதை அந்தர்முகமாக்குதலும் ஒரு வழி; இவ்விரண்டும் ஒன்றே.

இப்படி ஒரு முகமான [illegible]

மற்ற எண்ணங்கள், இவ்வெல்லாவற்றினின்றும் மனதைத் திருப்புவதும் ஆகும்; இப்படி மனம திரும்புவதே அந்தர் முகம் எனப்படுகிறது.

இப்படி மனம் அந்தர்முகப் படுவதற்கு ஒரு அடையாளமுண்டு; அதைக் கொண்டு அப்பியாசிகள் தம்மைத்தாமே பரீட்சித்துக்கொண்டு, பொய்யான பயனைக் கொண்டு ஏமாறாம லிருக்க வேண்டும். இதை இங்கு விரிப்போம்.

"மனம்" என்பது உடம்பில இணை பிரியாதபடி இசைந்திருக்கிறது. அதெப்படிஎனின், மனதின் சக்தியே ஆகிய

**தென்னாபிரிக்கா, டர்பன்**
**திரு. ச. மு. பிள்ளை அவர்கள்**

உயிர் மூச்சு ரூபமாக உடம்பில் புகுந்து, அதனுடன் ஒன்று யிருக்கிறது. மூச்சு என்னும் கயிற்றால் உடம்போடு மனம் கட்டுண்டிருக்கிறது என்னலாம். இக்கயிற்றை அவிழ்த்துக் கொண்டு தான் மனம் அந்தர் முகமாக முடியும். இப்படி மனம் உள்ளபடி அந்தர்முகமாகுமானல், உடம்பு பிணம்போல்மூச்சற்று நின்றுவிடும். மூச்சு அடங்காதவரை மனது உலகப் பற்றுள்ளதாய், உலக நினைவுகளுக்கு இரையாயிருக்கும்.

இதனால் மூச்சை நிறுத்தப் பிராணாயாமம் என்ற அப்பியாசம் தேவையென்பது இலலை. 'நான் யார் என்று கண்டு பிடிப்பேன்' அல்லது 'நான் என்பதின் மூலத்தைக் கண்டு பிடிப்பேன்' என்ற உறுதியில் நிலைத்து விடுமாகில். மூச்சுத் தானே அடங்கி, உயிர் உடலினின்றும பிரிந்து, மனதுடன் ஒன்றாகி மனதானது அந்தர் முகமாகி உள்ளே அம்மூலத்தை நோக்கி ஆழ்வதற்கு அதுவே போதும்.

பிராணாயாமம், மந்திரசெபம், முதலான முறைகளால் மூச்சு அடங்கப்பெறாலும். அப்பால் அப்படி ஒரு முகப்பட்ட மனம் அகந்தையின் மூலத்தை நோக்கி ஆழவேண்டுமே தவிர, வேறுவிதத்தில் ஆன்ம விளக்கமாகிய விடுதலையைப்பெற இயலாது.

இப்படி மனம் ஆழ்வது எவ்வாறு என்று பகவான் கூறுகிறார்: "நீரில் விழுந்த பொருளைக் காண வேண்டி ஒருவன் முழுகுவது போல, அகந்தை எழும் இடத்தைக் காண வேண்டி, கூர்ந்த மதியால், பேச்சு மூச்சு அடக்கிக் கொண்டு இதயத்திற்குள் ஆழ்ந்து தன் உண்மையை அறிய வேண்டும்" இஃதே வழி.

பல பிறவிகளிற் செய்து வந்த தவம் முதலியவற்றால் பரிபக்குவமான மனம், ஈசன் அருளுக்கு உரியதாகி, இந்தச் சாதனத்தில் ஒரு முகப்படும். பரமன் அருளே தான் இவ்வழியில் துணையாகுமென்று மகான்கள் யாவரும் ஏக மனதாய்ச் சொல்லியிருக்கிறார்கள். இவ்வருளைப் பெற மனிதன் அன்பு செய்யவேண்டும்; அன்பில்லாமல் ஒன்றுமில்லை; அன்போ பரிசுத்த மனதுக்கே வரும்; மனம் பரிசுத்தமாவது அறத்தினால்தான். ஆகையால் அதற்கு அறம் — தர்மம் — அடிப்படையாகும்; அறத்தை மதியாதவருக்கு 'வீடு' எப்படிக் கிட்டும்?

இவ் வறமானது, பகவத் கீதையில், தெய்வீக சம்பத்து என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது; 'பயமின்மை, மன சுத்தி, விவேகம், பக்தி இவற்றில் நிடம், தானம், தன்னடக்கம், ஈசனைத் தொழுதல், விசாரம், மன ஏருமைப்பாடு, நேர்மை, அகிம்சை, சத்தியம், சினமின்மை, அபிமானமின்மை சாந்தி, கோள் சொல்லா திருத்தல், இரக்கம், ஆசைகளுக்கு உட்படாமை, மேன்மை, அறமல்லாதவற்றிலிருந்து மனம் திரும்புதல், தைரியம், பொறுமை, உறுதி, சுத்தி, துரோகம் செய்யாமை, கர்வமற்ற தன்மை, இவைகள் தெய்வீக சம்பத்தாம். இவற்றால் மனிதன்விடுதலைக்குரியோனாவான். தம்பம், கர்வம், சினம் அவிவேகம் இவை தீய குணங்கள். இவற்றை சாது சங்கம், தெய்வ க்திமுதலியவற்றால் தொலைக்க வேண்டும்; ஈசன் அருளுக்கு ஆளாக வேண்டும். அவ் வருளின் வசமாய் மனிதன் இச் சாதனத்தில் ஈடுபடுவான்.

ஈசனைப் பூசித்தல் என்பது இரண்டு விதம்; பேத புத்தியுடன் செய்வது ஒன்று; அவனே தன் உண்மை என்ற விவேகத்தோடு அன்பு செய்தல் மற்றொன்று; இவற்றல் இரண்டாவதே மேன்மையானது. தன்னிடமே யாவருக்கும் அன்பு மிகுதி ஆகையால், ஈசனைத் தான் என்றே எண்ணுதல் அவனிடம் பூர்ண அன்பு செய்வதாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.


# இந்துசாதனம்

யாழ். நந்தன ஹு மாசி மீ
௨௦ உ செவ்வாய்க்கிழமை


## மது வரம்பு உயர!

இலங்கை அரசாங்கத்துக்கு அட்டமத்தில் முடவன் புகுந்து விட்டான் போலும். பணகிலை நேர் குறைந்துவிட்ட தென்றால் நெறி முறையும் சீர்குலைந்து விட்டதே! சாராயம் ஆறுரூபாவாக்கினால் வாராத செல்வம் எல்லாம் வரும் என்று எண்ணியது இந் நாட்டரசாங்கம் என்றால் அரசியல் அழகைப் பாருங்கள். மதுவுண்போர் தொகை பொதுவாகக் குறைந்துவிட்டதென ஒரு ஆட்சிமுறையில் அழுகைக் குரல் கேட்குமேயானால் அறங் கூற்றாகும் காலம் அண்மித்துவிட்டதென்றே சொல்லவேண்டும்.

அரசாங்கத்தின் மதுக் கொள்கை என்னவென்றாலும் கேட்டால் அது பொது சனத்தைப் பொறுத்ததென்றபோலிப் பேச்சு மறுமொழியாகின்றது. மக்கள் மதுவை நீக்க வேண்டுமென்று முயற்சித்தால் வாக்களிக்கும் உரிமை குடியைப் பெரிதும் விரும்பும் ஆண்களுக்கேயன்றி அதை ஒழிக்கக் கண்ணீர் வடிக்கும் காரிகையாருக்கில்லை,

ஆகவே எந்த வழியில் இந்த அரசாங்கம் அறமுறையில் நடக்கிறதென்று யார்தான் கேட்கமாட்டார்கள்.

அக் காலத்தில் அரசு நடத்திய ஆன்றோர் அறநெறி கைப்பிடித்துச் செங்கோல் செலுத்தக்கூடியதாயிருந்ததை இக்காலத்து அரசியல் அன்பர்கள் அறிவார்களா?

இலங்கை அரசாங்கமே! ஆறுரூபாவுக்குச் சாராயம் என்றால் ஆறு சதத்திற்குக் கள் கிடைக்கும் அன்றோ? மறவரம்புயர மது உயரும், மது உயரச் சதி உயரும், சதியுயர விழிவருமேஎன்று சொல்லக் கூடிய வகையில் மறச் செயலுக்குரிய வரம்பை வரவர உயர்த்தும் அரசியல் மதிதான் என்னையோ? ———

### தொற்றுநோய் வைத்தியசாலை மாற்றம்

யாழ்ப்பாணநகரத்திலுள்ள தொற்றுநோய் வைத்தியசாலை இனிமேல் அந்தவிதமாக உபயோகிக்கப்படாதென்றும் நெருப்புக்காய்ச்சல் முதலிய கடுங் காய்ச்சற்காரரின் பாவிப்புக்காகவே விடப்படுமென்றும் அரசாங்கம் ஒழுங்கு செய்திருக்கிறதாம், நகரசபைத் தலைவரின் முயற்சியினாலேயே இம்மாற்றம் நிகழ்கின்றது.

# ‘பராசக்தி’ப் படமாம்!

## புதுமை என்ற போர்வையில்
## பழிமொழி! பரநிந்தை!!

“பராசக்தியாம்” அருமையான படமாம்; அங்கு இடம் இல்லையாம்! என்று தெருவிலுந் திண்ணையிலும் பேச்சு ஆரம்பித்துவிட்டது.

இப்படியே முன்னர் “சிந்தாமணி” பின்னர் “வாழ்க்கை” என்ற படங்கள் அபிமானத்தைக் கிளப்பின.

இப்படத்தை போய்ப் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் எளவில்லை! ஏதோ கண்டனமென்றும், சண்டமாருதச் சொற்பெருக்கென்றும் அதிலே உணர்ச்சி கொள்ளப் பலர் தூண்டியும் உள்ளம் ஊக்கம் கொள்ளவில்லை?

காரணம் “பராசக்தி” என்ற புனை நாமம். தெய்வப் பெயர் கொண்ட ஓர் கதை தெய்வத்தன்மையைச் சித்தரிக்கும் வகைத்தாயல்லவா இருக்கும்! அவ்வாறில்லாது பொதுமக்களின் பொழுதுபோக்குள்ளத்தைப் புலாச் செய்யும்படித்தானதென ஆகிக்கத தக்கதாயிருந்தது....!

ஆனால் இப் படம் மக்களினிடையே விபரீத — மனப்பான்மையை உண்டுபண்ணிவிடுமென்றும் சைவ சமய சின்னத்தை திரை மறைவில் நடத்தப்படுவதாற் றீமையாகும் என்றும் நேயர்கள் பலர் அஞ்சி இந்துசாதன இதழில் இதற்குத் தடையைக் கோரிய என்று கவலைகொண்டார்கள். எனவே, படத்தைப் பார்க்க நேர்ந்தது; உள்ளங்கை நெல்லிக்கனிபோல படக்கலையின விடக் களஞ்சியம் வெளிப்படையாயிற்று படமுயற்சியைக் “கலை” என்று நாடோடிப் பேச்சிற் சொனனோமேயன்றி இன்று தமிழுலகிற்காணப்படும படத்திறமை கலையின்பாற் படாதென்றே கூறவேண்டும். .... என்னே! காதல் — கள்ளக்காதல் அதற்கேற்ற பாடல். இதறகாக பல்யுத்தம் புகைவண்டி விசை வண்டி விபத்து. கடல் அல்லது எரியிற கண்டம், ஆபாசமான செய்கைகளுக்கு நிலையங்களாகக் கோயில்கள்! இவை எல்லாஞ் சேர்ந்தாற் படமாகின்றது. கலையாகுமா?

நிற்க, “பராசக்தி” என்ற மகுடம் கொண்ட படத்தின் உயிர் அம்சம் பராசக்தியைப் பற்றியாக வேண்டுமே! ஆனால் ஒரு காட்சிமட்டும் பராசக்தி கோயிலைக் காட்டி அங்குள்ள அர்ச்சகரின் அந்தரங்க கீழ்மையை வெளிப்படுத்தவிட்டுக் கதைக்குப் பராசக்தியென்று பெயர் தீட்டிவிட்ட கதையாசிரியன் திறமையே திறமை! சிலம்பின கதை சிலப்பதிகாரம்என்றால் ஆங்கு சிலம்பு அதற்கு உயிர் நாடியாயுள்ளது. இவ்வாறு பல உள. ஆகவே பொருத்தமற்ற பெயரைச்சூட்டிப் பொது மக்களுக்குக் கருத்தமையா அபிமானம் ஊட்டும் இந்த வெள்ளித் திரை விசித்திரத்தை உற்று நோக்கின் அதை உண்டுபண்ணியவர்களின உள்ளக்கிடக்கை புலனாகின்றது. உலகில் பல இன்னல்கள் விளைகின்றன. இன்பமும் துன்பமும மாறி மாறி வருகின்றன. இவை எல்லாம அரசாங்கத்தின அட்டூழியத்தால் நிகழ்கின்றனவென்றால் இது விபரீதக் கொள்கையா? அன்றி புத்தி மாறாட்டப் பொதுவுடைமை என்னும பொது மனப் புரட்டா?

ரூசிய தேசத்தில் சர்வாதிகாரிக்கெதிரானவர்கள் இருந்த இடமில்லாமற் போகும்படிசெய்கிலை அட்டூழியமல்ல! சாதிவெறி பிடித்து யூதர்களை வேரறக் களையும் சமூகக் கொலை அட்டூழியம அல்ல!! ஒரு பெண் மண முடித்து விதிவலியாற் கணவனிறக்க வாழ வழி தெரியாது நின்றால் இது அரசாங்க அட்டூழியமாம்! மாடமாளிகையிலிருந்து இந்திரபோகந் துய்த்த பெண் சகடக்கால் போல வரும் செல்வ புரட்சியில் ஏழையாகிவிட்டால்... வயலில் வேலை செய்து — அன்றிக் கூலித் தொண்டாற்றி வயிறு வளர்க்கக்கூடாதா! என்றும் ஏழைகளா

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

தொடர் கதை

## பொழுது விடிந்தது! புயல் ஓய்ந்தது...

### செந்நிறக் கதிர்கள் அரசிளங் குமரனுக்கு உயிரொளியைக் கொடுப்பனபோ லிருந்தன!!

# ★ நீரர மங்கையர் ★

— 6 —

அவன் கடலில் இறங்கிய இடம் தனது மாளிகைக்குக் கிட்டவே என்று முதலில் எண்ணி மகிழ்ச்சியடைந்தான். ஆனால் மனிதர் நீருக்குள் உயிரோடிருக்க முடியாது என்ற நினைவு உடனே அவளுக்கு வந்தது. ஆகையால் தனது மாளிகைக்கு வருவதற்கு முன் இறந்துவிடுவான் என்பதை உணர்ந்தாள். அவன் ஒருவேளை இறந்துவிடுவானோ என்ற எண்ணம் அவளை வருத்தியது. அக் காரணத்தால் உடைந்த மரக்கலத்துண்டுகள் எங்கும் பரந்து நெருங்கியிருப்பவும் அச்சமின்றி அவ்வரசிளங்குமரன் வீழ்ந்த இடத்தை நோக்கி விரைவாய் நீந்திச் சென்றாள். திரை மோதிப் பலமாய் அடித்ததால் அங்கே நீந்துவது அவ்வளவு இலகுவன்று. நீருக்குள்ளே தாழ்ந்தும் மிதந்தும் இடர்ப்பட்டு நீந்திச் செல்வதற்கு அரசிளங்குமரன் வலியற்றுப்போனான். அவன் காலுங்கையும் களைப்பினால் ஓய்ந்துவிட்டன. கண்களும் மூடிவிட்டன. அவன் உயிருக்கு இடுக்கண் வரும் போல் இருந்தது. இந்தத் தருவாயில் அவள் அவனருகில் வந்தாள். அவ்வாறு அவள் வராவிடின் அவன் இறந்திருப்பான். அவனை அணுகியதும் அவள் தலையை உயர்த்தி நீருக்கு வெளியே பிடித்துக்கொண்டாள். இவ்வண்ணம் இருவரும் இருக்க அலை மோதி அவரை அங்குமிங்கும் இழுத்துச் சென்றது அன்று இரா முழுவதும் இந்த நிலையிலேயே இருந்தனர்.

பொழுது விடிந்ததும் புயல் ஓய்ந்தது. உடைந்த மரக்கலத்தின் ஒரு சிறு துண்டுகூட அங்கு இல்லை. தனது செந்நிறக் கதிர்களைப் பரப்பிக்கொண்டு சூரியன் கடலினின்று வெளியே எழுந்தது. அக்கதிர்கள் அரசிளங்குமரனுடைய முகத்திற்கு உயிரொளியைக்கொடுப்பனபோல் இருந்தன. அதனால் இன்னும் அவன கண் மூடியவண்ணமாகவே இருந்தான. இதைக் கண்டதும அச்சிறுமி அவனது அழகிய முகத்தில் ஒரு முத்தமிட்டுத் தனது கையால் அவன கூந்தலை மெல்லெனத் தடவி மேலே உயர்த்தினள். அப்பொழுது அவனின உருவம் கடலினது அடிப்பாகத்தில் தனது தோட்டத்தில் வைத்திருக்கும் வெண்கல் உருவமபோல இருப்பதைக் கண்டாள். பின்னும் ஒரு முறை அவனைத் தழுவி முத்தமிட்டு, அவன உயிரோடு தப்பிப் பிழைக்க வேண்டுமென்று ஆவல் கொண்டாள்.

தனக்கெதிரே கரை இருப்பதை இப்பொழுதுதான கண்டனள். அங்குள்ள கரிய பெரிய மலையின் உச்சியில் பனி உறைந்து வெண்ணிறமாக விளங்கிக்கொண்டிருந்தது. இதனால் தூரத்தினின்று அம்மலை உச்சியைப் பார்க்கும்பொழுது அங்கு பாலினும் வெண்மையான அன்னப்பறவைகள் கூட்டங் கூட்டமாய்ப் படுத்திருப்பது போலத் தோன்றும். கரையோரமாய்ப் பெருங் காடு அடர்ந்திருந்தது. காட்டின் எல்லையில ஓர் உயர்ந்த கட்டிடம் தெரிந்தது. அது ஒரு கோயிலோ அல்லது மாளிகையோ என்று அவள் ஐயுற்றாள். இக் கட்டிடத்துக்குப் பக்கத்தில ஒரு தோட்டம இருந்தது. அங்கு எலுமிச்சை, தோடை, முதலிய மரங்கள உண்டு. இவ்விடத்திலே கடல்போய் வளைந்து ஒரு சிறு குடா வடிவாய் இருந்தது. அங்கே தோன்றும் கறகளுக்கு நடுவில காலை வைத்தால் அது போய் வெண மணலிற்படும். இவற்றைக் கண்ணுற்றதும் அவள் அரசிளங்குமரனை அணைத்துக்கொண்டு அக் குடாவுக்கு நீந்திச் சென்றாள். கரையை அடைந்த பினனர்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

### கலைமாணி. க. கணபதிப்பிள்ளை அவர்கள்
### இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர் ஆக்கியது.

திருத்தொண்டர் திருநாள்

## ஆளுடைத் தொண்டர் செய்த ஆண்மை

## எம்பிரான் அன்பரான எறிபத்தர்

கொங்க தேசத்திலே கருவூரிலே எழுந்தருளியிருக்கும ஆனிலைப் பெருமானை வழிபடுவதோடு அப் பெருமானுடைய அடியார்க்கு வரும் இன்னல்களை நீக்கும திருத்தொண்டை மேற்கொண்டு வாழ்ந்தார் எறிபத்த நாயனர்.

இவருடைய தொண்டு இவ்வாறிருக்க, சிவகாமியாண்டார் என்னும் ஒரு அடியார் ஆனிலைப் பெருமானுக்குப் பூச்செய்து பூமாலைகட்டிச் சாத்தும் திருத்தொண்டை மேற்கொண்டு வந்தார். ஒருநாள அந்நகரின் அரசனாகிய புகழ்ச்சோழ நாயனருடைய பட்டவர்த்தனயானை அவர்கொண்டு சென்ற பூக்களைச் சிதறியது. அவர் அலறினர். அதைக் கேட்ட எறிபத்த நாயனர் யானையையும் யானைப் பாகரையுங் கொன்றார். அதையறிந்த அரசன் கோபங்கொண்டு படைகளுடன் அவ்விடத்துக்குச் சென்றபொழுது எறிபத்த நாயனரே யானையையும் பாகரையுங் கொன்றாரென்பதையறிந்து நாயனரிடம் [illegible] தன்னையுங் கொல்லும்படி நாயனரை வேண்டினர். தாம் கினையாத இந்நூதன நிலைமையைக் கண்ட எறிபத்த நாயனர் தன் பற்றுக் தன்னைத் தானே கொல்ல நினைத்தார். இங்ஙனம் புகழ்ச்சோழ நாயனரும் எறிபத்த நாயனரும் அன்புற்றுத் தாங்களே தங்கள் வாழ்க்கைக்கு இறுதி விளைந்து நிற்கும் தருணத்தில் நடந்தவை யெல்லாம இறைவன் திருவருளின்படியே நடந்தன வென்று ஓர் அசரீரி அவர்களுக்கறிவித்தது. யானையும் மாண்டவர்களும எழுந்தார்கள். பூக்கள் முன்புபோற் கூடைக்குளிருந்தன.

சிவகாமியாண்டாருக்குச் சிவதொண்டு விருந்த ஆர்வச் சிறப்பு ஒன்று சிவனடியாருக்கு அபயம் வரும்பொழுது எறிபத்த நாயனர் அதைக் கண்டு சகிக்கலாற்றாச் சிறப்பு மற்றொன்று. சிவ தொண்டுக்கோ சிவனடியாருக்கோ இடையூறு நிகழ்தலைத் தாங்கமாட்டாத புகழ்ச்சோழ நாயனருடைய சிறப்புப் பிறிதொன்று. எறிபத்த நாயனரும புகழ்ச்சோழ நாயனரும தம் வாழ்க்கையையே உதறுந் தன்மையராய்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பராசத்திப் படமாம்

2-ம் பக்கத்தொடர்ச்சி

யுள்ளவர்கள்மட்டும் கூழுக்குக் கும்மாளம் போட்டுப் பாத நொந்து மேனிவாடப் பாடுபட வேண்டுமாம்?

அரசாங்கத்தை அவதூறு செய்ய — அதுவும் அறநெறி உத்தமர் காந்திப் பெரியார் அடிச்சுவட்டில் நிற்கும் — அரசியற் கட்சி நடாத்தும் ஆட்சியை ஏளனம் செய்ய முன் வந்த 'பராசத்தி'ப் படத்தின் ஒவ்வாமை ஒன்றில் இரண்டலா? அவ்வளவில் நின்று விடக்கூடாதா? சமயத்தையும்.... ஒரு கை பார்த்து விடுகிறேன் என்று சமயம் பார்த்துவிட்டதே.

பராசத்தி கோயிலிலே பூசகர் அபசாரப் பேர்வழி என்றுற் கோயிற்பரிபாலனம் எங்கும் அவ்வாறென்று கொள்வதா? அன்றிப் பராசத்தி வணக்கத்துக்கும் பூசகருக்கும் என்ன தொடர்பு. பூசகர் ஒருவன் காமாந்தகாரனானால் சமயமும் சமயக் கொள்கையும் சமயக் கோவில்களும் விபசார பீடங்களாகின்றனவா?

கதை சித்திரித்தவர் தாம் கலாபண்டிதர் என்றுலகிற்குக் காட்ட முன்வந்தவர் போல அவரது அலங்கோலப் பிரயத்தனங்கள் காட்டுகின்றன. விகட விருப்புள்ள மாணவர்கள் 'ஆலயந் தொழுவது வேலை வினைக்கேடு' 'அன்னையும் பிதாவும் பின்னடிக் கிடைஞ்சல்' என்று முதுமொழிகளைப் புதுவிதமாக மாற்றி யமைப்பது போல ஏளன முறையிற் பழையனவற்றைச் சொல்லிக் காட்டிய பாடல்களும் ஆடல்களும் அவற்றை ஆக்கியவரின் யோக்கியத்தையும் போக்கையும் எடுத்துக் காட்டுகின்றன.

நட்டகல்லைத் தெய்வமென்று நாலு புட்பஞ் சாத்துகிறீர் என்று நையாண்டி செய்யும் கிரீச்சுதவாதப் பொது மடைமையினர்கள் தங்களைத் தெய்வமென்று பொதுமக்கள் என் மலர் மாலை சூடவில்லை என மனம் புழுக்குகின்றார்களா? இவர்கள் அறங்குன்றி மறம் நின்ற மிருகக் கொள்கையின் நடுகற்களாக விளங்குகின்றார்கள் என்று நாம் சொல்ல வேண்டியதில்லை.

## ஆளுடைத் தொண்டர் செய்த ஆண்மை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நின்றநிலை உற்று நோக்கவேண்டியிருக்கிறது. அரசனு யிருந்தும அரனுக்கும் அரனடியாருக்கும் அடிமையாந் தன்மையைத் தாங்கிய புகழ்ச்சோழ நாயனாருடைய சிறப்பு எத்துணைத்தென்பது எம்மால் இயம்புதற்கரியது. அவர் வாழ்வெனும் மையல் விட்டு'' என்றபடி அரன் சந்நிதியில் தமது அரசவாழ்வை எளியதாய்க் கொண்டதுமன்றிப் "பித்தப் பத்தரினதாய்" என்றபடி அடியாரைப் பேணுவதிற் பித்துடையவரா யிருந்தமை முதலியவற்றை இக்காலத்தின் அதிகார பதவிகள் பெற்றதும் அகங்கார மீதூர அருள்நெறி மறந்து மருளநனி மிகுந்து மயங்கிநின்று தம்மைச் சைவமக்களென்று சொல்லளவிற் சொல்வோர் சிறப்பாகவும் சைவமக்கள் யாவரும் பொதுவாகவும் தங்கள் உள்ளங்களிலே உறுதியாகக் கொண்டு உய்தியடைய முயல்வாராக.

## நேயர்கள் நெஞ்சம்

ஆசிரியர் அவர்,

### அஸ்திவந்த வெள்ளிக் கலசம்

1948-ல் காந்தி அஸ்தி யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டுக் கீரிமலையிற் கரைக்கப்பட்டது. அந்த அஸ்தி வந்த வெள்ளிக் கலசத்தையும் வெள்ளித் தட்டத்தையும் திரு. கே. கனகரத்தினம் கம்மை அழைத்து ஒப்படைத்தார்கள். இப்பொருட்கள் கீரிமலைச் சர்வோதய ஆச்சிரமத்தில் வைக்கப்படவேண்டுமென்றும் இவை ஆச்சிரமத்துக்கு உரிய சொத்தென்றும் திரு. கனகரத்தினம் அவர்கள் தெரிவித்தார்கள்.

சி. க. வேலாயுதபிள்ளை
அகில இலங்கைக்
காந்தீய சேவாசங்கம்.

### நயினாதீவில், கச்சியப்ப சுவாமிகள் தினம்

கந்தபுராணம் செய்தருளிய கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் தினம் நயினாதீவு ஸ்ரீகணேச வித்தியாசாலையில சென்ற திங்கட்கிழமை காலை அதிவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. தலைமையாசிரியர் திரு. ச. நா. கந்தையா அவர்கள் தலைமையில் பிரார்த்தனை பூசை முதலியன நடைபெற்றன.

அன்று மாலை பெற்றார் ஆசிரியர் சங்கச் சார்பில் ஒரு பொதுக்கூட்டம் திரு. வ. மூருகேசபிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் கந்தபுராணப் பெருமைபற்றிக் கூறினார். தலைமை யாசிரியர் திரு. கந்தையா அவர்கள் புராணத்தில் உள்ள தத்துவ உண்மைகளை விளக்கினார். திரு. இ. கணபதிப்பிள்ளை ஆசிரியர் சுவாமிகளின் சரித்திரத்தை எடுத்துரைத்தார். புராண படனமும் செய்யப்பட்டது. காரியதரிசி திரு. இ. நா. கணபதிப்பிள்ளை ஆசிரியரது நன்றியுரையுடன் கூட்டம் பூர்த்தியாயிற்று.

—நடி.ஓ.

## ∴ நீரர மங்கையர் ∴

(2-ம பக்கத் தொடர்ச்சி)

அவள் உடலில் இளவெய்யில் படும்வண்ணம் அங்குள்ள வெண்மணலில் அவனைக் கிடத்தினாள்.

இப்படியிருக்க, மேற்கூறிய கட்டிடத்தில் மணி அடித்தது அப்போது இளம் பெண்டிர் பலர் அதற்கு முன்னிருக்கும் தோட்டத்துள் வந்தனர். இத் தோட்டம் அவன் இருந்த இடத்துக்குக் கிட்ட உள்ளதால் தன்னை அவர் காணாதபடி கடலில் இருந்த ஒரு கல்லுக்குப் பின் போய் ஒளித்துக் கொண்டனள். தனது தலையையும் மார்பையும் கடல் நுரையால் மறைத்தனள் அங்கிருந்தவண்ணம் அவளில் யாராவது அரசிளங்குமரன் கரையிற் கிடப்பதைக் காண்பரோ என்று உற்றுநோக்கிக்கொண்டிருந்தனள். சற்று நேரத்தின் பின் இளம் பெண் ஒருத்தி தற்செயலாய் அரசிளங்குமரன் கிடந்த இடத்துக்கு வந்தனள். அவன் அங்கு கிடப்பதைக் கண்டதும் அவள் பயந்து கூச்சலிட்டுத் தன் தோழியரைக் கூவியழைத்தனள் அவர் யாவரும் அங்கு வந்தபின் சிறிது நேரத்தில் அரசிளங்குமரன் மயக்கந்தெளிந்து தன்னைச் சூழ்ந்து நிற்கின்ற யாவரையும் பார்த்துப் புன்னகை புரிந்தான். நீரமகள் அதைக் கண்டனள். "என்னைமட்டும் பார்த்து இவர் புன்னகை செய்திலர்....யான இவரை உயிரோடு காப்பாற்றியதை அறிந்திலர்போலும்." என எண்ணி அவள் மிகவும் துன்பமுற்றாள். அங்கு வந்த இளம் பெண்டிர் அவனை அக் கட்டிடத்துள்ளே தூக்கிச் சென்றனர். இதைக் கண்டதும் மிக்க துயரத்துடன் திரும்பித் தனது தந்தையின் மாளிகைக்குப் போவதற்கு நீருக்குள் ஆழ்ந்தனள்.

இயற்கையாய் அவள் ஆழ்ந்த சிந்தை யுடையவள். ஒருவரோடும் மிகுதியாய்ப் பேசுவதில்லை. இது நிகழ்ந்த பின் அவள் முன்னரிலும் பார்க்க மௌனம். அவள் திரும்பிப் போனதும் சகோதரியர் "மேலே நிலவுலகத்தில் என்ன என்ன கண்டாய்? அதை எமக்குக்கூறு," என்று அவளைக் கேட்டனர். அதற்கு அவள் ஒன்றும் பேசாது அகன்று வேறிடம் சென்றனள். .... .... .... ...(வளரும்)

## அடைவு நகை விற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் அடைவு பிடிக்கும் காம்பன் ஊர்காவற்றுறை வீ. தம்பிப்பிள்ளை அவர்களின் அடைவு கடையில் அடைவு வைத்து மீட்கப்படாதிருக்கும் கீழ் காணும் நகைகள் என்னால் 1953 ம் ஹூ பங்குனி மூ 28-ம் உ முற்பகல் 9 மணி தொடக்கம் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

| அடைவு வைத்த திகதி | நம்பர் | தொகை | அடைவு பொருள் | பெயரும் ஊரும் |
|---|---|---|---|---|
| 5—9—51, | (3095/29) | 25·00 | ஒரு தாலி | நா. வேலுப்பிள்ளை காம்பன் தெற்கு. |
| 27—10—51 | (3348/129) | 140·00 | ஒரு சோடி காப்பு ஒரு மோதிரம் | ஐ. கனகம்மா, காம்பன். |
| 8—11—51 | (3380/23) | 40·00 | ஒருசோடி தோடு, ஒரு மோதிரம் | கா. அப்புக்குட்டி, நாரந்தனை. |
| 12—11—51 | (3417/60) | 100 00 | ஒரு சங்கிலி, | கா. சரவணை, நாரந்தனை |
| 3—12—51 | (3497/6) | 20·00 | ஒரு சோடி தோடு, | கு. சின்னத்துரை. சரவணை. |
| 3—12—51 | (3498/6) | 175·00 | ஒரு தாலிக்கொடி, | வை. சோமசுந்தரம், நாரந்தனை. |
| 23—12—51 | (3580/89) | 80·00 | ஒரு சங்கிலியும் பென்ரனும், | க. தரியர், ஊர்காவற்றுறை. |
| 24—12—51 | (3582/91) | 50 00 | ஒரு பென்ரன் | ச. சின்னத்துரை காம்பன். |
| 9—1—52 | (3639/34) | 10·00 | ஒரு மோதிரம் | சவுரி பேதுரு சரவணை மேற்கு. |
| 29—1...52 | (3729/124) | 10·00 | ஒரு மோதிரம், | ஐ சுப்பிரமணியம், சரவணை இருக்கு. |

1953 ஹூ மாசி 25-ம் உ.

வை. ஏரம்பமூர்த்தி
Auctioneer.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வண்ணை வைத்தியேசுவரசுவாமி கோயில் உற்பத்தி

### வண்ணை வைத்தியேசுவரன் கோயில்

அப்பொழுது தம்பிரான் அவர்கள் "உன்னை இந் நிலைக்குக் கொண்டு வந்தவர் உனது பரமபிதாவாகிய வைத்தியலிங்கக் கடவுளும் உலக மாதாவாகிய தையல நாயகித் தேவியாருமன்றோ அவர்க்கு ஆலயம் அமைத்த பின்னரே உனக்கு மாளிகைகட்டவேண்டும்" என்றுகூறியருளினார் அதுகேட்ட செட்டியார் 'அவ்வாறே செய்வேன்" எனச் சம்மதித்துத், தம்பிரான் குறித்த நிலத்தை வாங்கி, 17-7-ம ஆண்டில் அத்திவாரம் இட்டு மூன்று வருடங்களுக்குள்ளே கட்டிப்பூர்த்திபண்ணினர் பின் (1790 A D) சாதாரண ஹூ சித்திரை மீ பூர்வபக்ஷ ஸப்தமியோடுகூடிய புனர்பூச நக்ஷத்திர சுப தினத்திற் பிரதிஷ்டையுஞ் செய்துவைத்தார்.

இந்த வைத்தியலிங்கச் செட்டியார் அவாகள் வைத்தியேசுவர சுவாமி கோயிலைச் சிறப்பாக அமைத்தமையோடு வேம்படிப் பிள்ளையார் கோயில் என வழங்கும் கடையடிப் பிள்ளையார் கோயிலையும், சுந்தட்டு வயிரவர் கோயிலையும், முற்றவெளியில் மாரி அம்மன் கோயிலையும், வண்ணார் பண்ணை வடமேற்கில் ஐயனார் கோயிலையும், பிடாரி கோயிலையும் அமைப்பித்து நித்திய நைமித்திகங்கள் கிரமமாக நடப்பதற்கான நிபந்தங்கள் அமைத்து இந்த வைத்தியேசுர ஆலயத்துக்குப் பரிவார ஆலயங்களாக நிறுவி உள்ளார். மேற்படி ஆலயங்களைத் தாமே பதினேந்து வருடகாலம் வரையில் இனிது நடாத்திய பின்னர் தமது புத்திரர்களாகிய ஸ்ரீ கோபாலச் செட்டியாரிடத்திலும், ஸ்ரீ கந்தப்பச் செட்டியாரிடத்திலும ஒப்புவித்து விட்டு, குறித்த ஆலய தருமங்கள் எக்காலமுஞ்செவ்வனே நடைபெறுதற்கு வேண்டிய தருமசாதனமுஞ் செய்துள்ளார். அத்தரும சாதனம் வருமாறு:-

### செட்டியார் இவ்வாலயத்துக்குச் செய்த தரும சாதனம்.

கிறிஸ்தாப்தம், 1805-ம் ஹூ சித்திரை மீ 20உ.

ஈழமண்டலம் யாழ்ப்பாண நகரிலிருக்கும் ஸ்ரீ மனத்தையல்நாயகி பங்கன் வயித்தீசுரமூர்த்தி கோயில சிவதர்மம் திருப்பணி வேலை பூசை நைவேதனம் காணி பூமி குடுக்கல் வாங்கல் உடமை நகை தட்டுமுட்டுகள். ரொக்க முதல் கணக்கு, இணுவில் கிராமம் நாகபட்டணம் ஜெகநாதபுரம் கிராமம் இது முதலாகிய வைத்தீசுரன் கோயில் சிவதர்மத்துக்குச் சேர்ந்திருக்கிற சகல காரியமும் பிள்ளைகள் கோபாலச் செட்டியாரும் கந்தப்பச் செட்டியாரும் பெண்வழி வங்கிஷத்தாரும் பிள்ளை பிள்ளை தலைமுறைக்கு வங்கிஷ கோத்திரம் உள்ளமட்டும் கோவில் விசாரணைக் காரியம்பார்த்து வடகரை தென்கரை ராமேசுரம் கோயில் சிவதர்மம் தனுக்கோடிக்கரை ஆதிசேது சத்திர தர்மம் திருவாரூர் மண்டப தர்மம் கோயில் படிக்கட்டளை சிவதர்மம் மடதர்மம் நந்தாவனம், திருவையாறு மடதர்மம் மதுரை சர்ப்பூரம் படிக்கட்டளை சிவதர்மம், நாகபட்டணம் பெரியகோவில் சிவதர்மம், படிக்கட்டளை, பூசை மடம் நந்தாவனம், புள்ளிருக்குவேளூர் சிவதர்மம படிக்கட்டளை மடதர்மம் நந்தாவனம் சிதம்பரம் கோவில் சிவதர்மம் திருப்பணி வேலைப் படிக்கட்டளை அன்னதானம், மடதர்மம், காசியம்பதி சத்திர தர்மம் அன்னதானம் வேதா

யீசுரன் கோயில் படிக்கட்டளை சிவதர்மம் தர்மபுரம் பண்டார சன்னிதி திருக்கூட்டங்களுக்கு அன்னதானம் இது முதலாகிய சகல தர்மங்களும் சிவகட்டளைப்படிக்கு எங்கள் வங்கிஷகோத்திரங்களுக்கு எல்லாம் கிடைத்திருக்கிற ஆதாயத்தை விடாமலுக்குப் பிள்ளைகள் ஆண்வழி வங்கிஷத்தாரும் பெண்வழி வங்கிஷத்தாரும் நடாத்தி நின்று விசாரணை பண்ணிவரவும் 1805 ம் ஆண்டு சித்திரை மாசம் 20ம் திகதி எழுதிக் கையெழுத்து வைத்தது, சிவன் அடியார்க்கு அடியேன எல்லாஞ் சிவன்செயல்" இதன் பின் தமது அந்தியகாலத்தைக் காசிக்ஷேத்திரத்திற் கழிக்க விரும்பி அங்குச்சென்று சிலகாலஞ் சீவித்தபின் திருவருளால் தமது உடல் கிரியாணத்தை உணர்ந்து சருக்கல்லினால் ஓர் தொட்டியமைப்பித்து அத் தொட்டியில் ஆரோகணித்துக்கங்கையில் இறங்கியுள்ளார். இவர்போன்ற மகா புண்ணிய புருஷர், இவ்வுலகில் முன்னும் பின்னும் இருந்ததில்லை; என்று சொன்னால் அது மிகையாகாது.

இதன் பின் இவர் புத்திரர்களாகிய திரு, கோபாலச் செட்டியார், திரு. கந்தப்பச்செட்டியார் ஆகிய இருவரும் தமது தந்தையாரைப்போலவே நற்குண நற்செய்கையுடையர்களாயும் சிவபூசாதுரந்தரர்களாயும் இருந்து, மேற்படி கோயிலைச் செவ்வனே பரிபாலித்து வந்தார்கள் இவர்கள். பெருங் கப்பல்கள் வைத்துப் பிரபலமான வர்த்தகஞ்செய்து பொருளீட்டினார்கள்

## தையிட்டியில் வள்ளுவன் கழகம்

அன்றும் இன்றும் அறநூல் ஒன்றே திருக்குறள் என்று அறிஞர் பலராலும் பாராட்டிவரும் குறளையும், அதைத் தமிழ்நாட்டுக்கு வழங்கிய மாபெருஞ் சிந்தனையாளன்—தமிழர் தலைவன் வள்ளுவனையும் எல்லா மக்களுக்கும் அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன், காங்கேசன்துறை வாலிபர்களால் வள்ளுவனுக்கென்று அவ்வறிஞர், — அறிஞர்க்கறிஞன் பேரறிஞன் பேரலேயே வள்ளுவன் கழகமொன்று சென்ற 22 2-53 ஞாயிறு பி. ப. 5-20 மணியளவில்தையிட்டி சனசமூக நிலையத்தில் திருவாளர் Dr. க. வே. சினிவாசகம், அவர்கள் தலைமையில் கூட்டப்பட்டது.

கழகத்தின் செயலாளராக திரு. கே. வீ. இராசரத்தினம் அவர்களும், திருவாளர்கள் இ. நாகேந்திரமும் த.சின்னையாவும் முறையே பொருளாளர் பரிசோதகர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

கழகம் அமைக்கப்பட்டதின் நோக்கம்பற்றி திருவாளர்கள் க. வே. சினிவாசகம், பண்டிதர் ம. குமாரசாமி ஆசிரியர், 'சிவாஜி நடமாடி', பொ. நாகலிங்கம் முதலியோர் எடுத்துக் கூறியதுடன் அன்றைய கழக நிகழ்ச்சிகள் 8-30 மணியளவில் சிறப்புடன் முடிந்தன.

## விண்ணப்பம்

காவெட்டி சரஸ்வதி சிரேஷ்ட பெண் பாடசாலைக்குப் பயிற்றப்பட்ட முதலாந் தராதரப் பத்திரமும் ஆங்கில சிரேஷ்டபாடசாலைத் தராதரப்பத்திரமும் அல்லது பண்டிதைப் பட்டமும் உடைய ஒரு தலைமை ஆசிரியை தேவை. தலைமை ஆசிரியையாகக் கடமையாற்றி அனுபவம் பெற்றவர் விரும்பப்படுவர்.

விண்ணப்பங்களை 13.5.53க்கு முன் மேற்படி பாடசாலையின் முகாமைக்காரருக்கு அனுப்ப வேண்டும்.

சி. முருகேசு
முகாமைக்காரன்.

கரவெட்டி
22—2—53

Mudlr. C. Murugesu
Udayar
Karaveddi West, Karaveddi
M 264 3—3—53.

## அறிவித்தல்

சித்தன்கேணிப் பிள்ளையார் கோவில் நித்திய பூசைக்கு ஓர் அர்ச்சகர் தேவை. விபரம் நேரில் விண்ணப்பிக்கலாம்.

மார்ச் மாதம் 10-ந் தேதி (மாசி 27க்குள்) தெரிவிக்கவும்

விலாசம்
மு. குமாரசுவாமிக் குருக்கள்
பிள்ளையார் கோவில்
சித்தன்கேணி:
M, 266 3—3—53.

## பண வசதி

யாழ்ப்பாணத்திலுள்ள காணிக்கு ஈட்டுக்குக் காசு கொடுக்கப்படும்.

விபரம்:-
D. இராசதுரை
பிறக்ரர் & நொத்தாரிஸ்
10-1ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
M. 265 3, 6—3—53

## அந்தணர் என்போர் அறவோர்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

ஞானசம்பந்தமூர்த்தி நாயனார் "வாழ்க அந்தணர்" என்ற தமது தேவாரத் தொடக்கத்தில் அந்தணரைவாழ்த்தியதும் அந்தணரின் பண்டைக்கால மேன்மைகளை நனகு விளக்குகின்றன

எனவே அந்தணர் குலத்தின் ஆதிகாலப் பெருமைகள் பல நூல்களிலும் பரக்கக் காணலாம். அவை எல்லாவற்றையும் எம்போன்றூர் எடுத்து விளக்குதல் இயலாது; எனினும் ஓரளவிற்கு மேலே கூறப்பட்டுள்ளதைப் பெரியோர்கள் அந்தண சிகாமணிகள் உற்று நோக்கி ஆவன செய்யவேண்டும் அந்தணர் குலம் பண்டைக் காலம் இருந்த நிலைமைக்கும் இன்றஇருக்கும் நிலைமைக்கும் பெரிதும் வித்தியாசம். அந்தணர்களே அந்தணர் குலத்தை அவமதிக்கிறூர்கள். ஆண்டவனுக்கு அடிமை செய்யும் குலம் என்பதை மறந்துவிட்டார்கள். அந்தணர்க்குரிய அம்சங்களை எல்லாம் இழந்து உத்தியோகமே உயர்பதவியென மதிக்கிறூர்கள். ஆகவே இவைகளைப் பெரியோர்கள் யாவரும் நன்கு ஆலோசித்து இங்ஙனம் நடக்கும் அந்தணர்கட்கு நற்புத்தி புகட்டி நல்வழியிற் செலுத்தி, ஆதிகாலப் பண்பை அந்தணர் குலம் மீண்டும் எய்தும் வண்ணம் செய்வார்களாக.


# டயறம்ஸ்

வருடா வருட

இனும்!
காசுத் துண்டு
இனுமாகவா?

# ஈஸ்ரர்கால விற்பனவு

## 1953-ம் ஆண்டு மார்ச் மீ

2-ந் திகதி தொடக்கமாக
புதிய பொருட்கள்! மலிந்த விலை!!
வந்து பாருங்கள்!!!
வீட்டுப் பாவிப்புக்குத் தகுந்தவை
பாடசாலை உடைகளுக் குரியவை!
உயர்ந்த ரகச் சேலைகள். சிறந்த கவனத்திற்குரியன.

## இனும்! இனும்!! இனும்!!!

இந்த விற்பனை காலத்தில்
ஒவ்வொரு பத்துரூபா பெறுமதியான
துணிகள் வாங்குபவருக்கு
ஒவ்வொரு காசுத்துண்டு வீதம் கொடுபடும்
இப்படியான5துண்டுசேர்த்துத்தருபவருக்கு ரூபா2காசாகஇனும்
" 10 " " " " 5காசாகஇனும்

இப்படியான இனுங்கள் எங்கே?
மறந்துவிடாதீர்! இவை உங்கள் பழக்க வழக்கமான
பட்டுப் புடைவைக் கடையில் மாத்திரந்தான்
அதுதான்

# டயறம்ஸ்

54-60, பெரியதெரு, யாழ்ப்பாணம்



# பிரகடனம்

திருவாதவூரடிகள்புராணம் உரையாசிரியர்: ம. க. வேற்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையுடன் விலை ரூபா 2-00,

பிரதோஷவிரதமான்மியம் (புதியபதிப்பு) சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரத காலத்திற் சுவாமி கும்பிடவேண்டிய ஒழுங்கு, இதனை அநுட்டிக்கவேண்டிய முறை, புத்திபூர்வமாகவும் அபுத்திபூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது; விலை சதம் 40.

அரிச்சந்திரபுராணம் - மயானகாண்டம் மேற்படி பண்டிதர் எழுதிய பொழிப்புரை இலக்கணக்குறிப்பு நூலாசிரியர்வரலாறு முதலியவற்றுடன் உயர்தரவகுப்புக்களுக்குச் செய்யுட்பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது. விலை சதம் 75.

மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம் திருவாசகத்திரட்டுடன்; மேற்படி பண்டிதர் எழுதியது; கொழும்பு விவேகாநந்தசபையார் நடத்தும் சைவசமயபாடப்பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாக விதிக்கப்பட்டது. விலை ரூ. 1—20 ச.

உலகம்பலவிதக்கதை I. (கோபாலநேசரத்தினம்) டிபண்டிதர் எழுதியது. படிக்கப்படிக்கத்தெவிட்டாதது. விலை ரூ. 1—25 ச

ஈழமண்டலசதகம்: ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை இயற்றியது இலங்கையின் மான்மியத்தை எடுத்துவிளக்குவது; விரிவுரையுடன் விலை ரு. 1-00

சைவசமயசாரம்: ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம்(B.A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்தசபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்றுயுள்ளது. விலை ச 45.

"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்) சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கிலமறிந்தோர் எவரும் படிக்கத்தக்கது. மூந்தி வெளிவராதது. விலை 60 சதம் (அணு 10)

புலியூர் (யமக) அந்தாதி மாதகல் மயில்வாகனப்புலவர் இயற்றியது ஆசிரியர் ம. க. வேற்பிள்ளைசெய்த உரையுடன் விலை சதம் 50

☞ வில்லிபாரதம் — புட்பயாத்திரைச் சருக்கம்: நுண்பொருள்விளக்கவிரிவுரை, நூலாசிரியர்வரலாறு முதலியவற்றுடன்; 1953-ம் 54-ம் ஆண்டு (யூலாய்) G. C. E. பரீட்சைக்குப் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது. (துரிதமாக அச்சாகிறது; மார்ஜ் மீ முற்பகுதியில் வெளிவரும்.)

முற்பணமனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்.

Apply: to PANDIT V. T. SAMBANDHAN Vannarpannai, Jaffna



Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna Jaffna on Tuesday! March 3 1953



# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா]
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும், வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.
Std. 14 20-11-46—20-11-49.



சூதக வயிற்றுவலி சொல்லாமலே மறையும்.

# கர்ப்ப எண்ணெய்

:: உபயோகியுங்கள் ::

மாத விலக்குக் காலங்களில் உண்டாகிற சூதகக்கட்டு, இடுப்புவலி, சுத்தோடுகூடிய சூதகம், கை கால் குடைச்சல், மயக்கம், கர்ப்பச்சிதைவு, அகாலப் பிரசவம் முதலியவைகளைக் குணப்படுத்தி மாத விலக்கைக் கிரமப்படி வெளியேற்றிக் கர்ப்பமுண்டாக்குகிறது.

● புட்டி ஒன்றுக்கு விலை ரு. 3-00 ●

ஏஜண்டு:- S. பொன்னுச்சாமிபிள்ளை,
133, தும்பகொடா தெரு, பலாங்கொடை. (†)

தலைமை ஆபீஸ் மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி, S.I.



L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நகைகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=0=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
ஸ்தானம்:
63, கன்னுதிட்டி
யாழ்ப்பாணம்.



திறமான
தேக்க மரங்கள்
பல தினிசுகளிலும்

திறமான
ருணிமார்க்ஓடுகள்
13¾, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.
Std. 2


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org